Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 31 (15 - 07 - 1991) திங்கட்கிழமை ஓசை: 147

## கட்டுப்பாடுகள் தளர்த்த தொண்டா கோரிக்கை

(கொழும்பு)

இந்தியாவுக்குச் செல்வதற்கான அனுமதியினை வழங்குவது தொடர்பாக தற்போதைய கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ் தொண்டமான் இந்திய அரசாங்கத்தை கேட்டுக்கொண்டிருக்கிறார். இலங்கையர் இந்தியாவிற்குச் செல்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ள இந்தநிலையில் தொண்டமான் இந்த வேண்டுகோளை (4ஆம் பக்கம் பார்க்க)

# கட்டைகாட்டில் தரையிறங்கிய இராணுவம் மீது கடும் தாக்கு!

## புலிகளின் சுற்றிவளைப்பில் இராணுவம்

(ஆனையிறவு)

கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரைச் சுற்றிவளைத்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அங்கிருந்து நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியுள்ள ஆனையிறவு இராணுவ முகாம் இராணுவத்திற்கு உதவும்பொருட்டு கடற்பரப்பில் தரித்து நின்ற விரசூரியா கப்பலில் இருந்து தரையிறக்கப்பட்ட இவ் இராணுவத்தினர் மீதே விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

வலிகாமம் கிழக்கு அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கட்டைக்காட்டுப் பகுதி ஆனையிறவு முகாமில் இருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. ஆனையிறவு முகாமில் இருந்து மிகக்குறுகிய தூரத்தில் உள்ள ஆழ் கடற்பரப்பும் இதுவே ஆகும்.

நேற்று முன்தினத்தில் இருந்து இக்கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா கடற்படைக் கப்பல்களில் இருந்து இராணுவத்தினரை தரையிறக்க சிறிலங்கா இராணுவத் தரப்பு முயற்சிகளை மேற்கொண்டதாயினும் நேற்று மாலையே இத்தரையிறக்கம் இடம் பெற்றது.

பதினைந்து படகுகளில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மாலை 5 30 மணியளவில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

றூபன் கணேஷ்

10-7-91 அன்று காலை 8 மணியளவில் மட்டக்களப்பு றவேக்குளத்தில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் புலிகள் தரப்பில் றூபன் (அம்பாறை) வீரமரணமடைந்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைக்காட்டுக் கடலில் கடற்படைப்படகு மூழ்கடிப்பு

(ஆனையிறவு)

அதேவேளை நேற்று நண்பகலுக்கு சற்று பின்பு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தரையிறங்கும் முயற்சியின்போது ஒரு கடற்படைப் படகு விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் மூழ்கடிக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்படகு மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அத்தரையிறங்கும் முயற்சி இராணுவத்தினரால் கைவிடப்பட்டது.

## கட்டைக் காட்டிலிருந்து மக்கள் வெளியேற்றம்

(ஆனையிறவு)

கட்டைக்காடு, நெடிய வெட்டைப் பகுதிகளிலிருந்து கடற்படையின் தாக்குதல் பீதி காரணமாகபெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து செல்வதைக் காணமுடிகின்றது. நேற்று நண்பகலுக்குச் சற்றுப் பின்னர் கடற்படைப் பீரங்கிப் படகுகளிலிருந்து இப் பகுதிகளை நோக்கிப் பலத்த தாக் (4ஆம் பக்கம் பார்க்க)

## பெரியஉப்பளஇராணுவமுகாம் காவலரண்கள் பல வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

உப்பளம் முகாம்மீது நேற்று முன்தினம் இரவு 8 20 மணிக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடும்தாக்குதலைத் தொடர்ந்து முகாமின் பல காவலரண்களும், சில கட்டடங்களும் புலிகள் வசம் வீழ்ந்துவிட்டது. முகாமின் பிரதான பகுதியைக் கைப்பற்ற நேற்றுக் காலை வரை கடும் தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

மிக நெருங்கிய துப்பாக்கிச் சண்டை

இந்தக் காவலரண்களையும் கட்டடங்களையும் கைப்பற்றும் யுத்தத்தின்போது இதுவரை காலத்தில் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற மோதல்கள் யாவற்றையும் விட நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த மோதலிலேயே மிக நெருக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. பி. எம். ஜி. உட்பட பல ரக ஆயுதங்கள் மீட்பு

(ஆனையிறவு)

ஆனையிறவு பெரியஉப்பளத்தில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மோதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஜி பி.எம் ஜி. - 01
★ ஏ.கே. ரகஎல்.எம்.ஜி. - 01
★ 203 பீரங்கி - 01
★ ரி-56-2 ரகத் துப்பாக்கிகள் - 04
★ ரி-56-1 ரகத் துப்பாக்கிகள் - 02
★ ரி-56 புதிய ரகத் துப்பாக்கி - 01

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு வீழ்ந்தால் புதிய அத்தியாயம் தொடங்கும்

### இந்திய செய்தியாளர் கறுப்புச்சாமி

(சென்னை)

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் ஆனையிறவைப்பிடிப்பதற்காக கடும் சண்டை நடைபெறுகிறது என்றும், இதில் 16 இராணுவ வீரர்கள் இறந்துள்ளார்கள் என்றும் இந்திய வானொலி அறிவித்தது.

கடும் சண்டையை ஒட்டிக் காயமடைந்த வீரர்களைக் ஹெலிகொப்டர் மூலம் எடுத்துவர முடியாததால் குண்டு பட்ட 6 இராணுவ வீரர்கள் இறந்து போயுள்ளார்கள் என்று இந்திய வானொலி நம்பத் தகுந்த வட்டாரங்களை ஆதாரங்காட்டி அறிவித்தது.

தமிழ்ப் போராளிகளுக்கும் சிறிலங்கா இராணுவ வீரர்களுக்கும் இடையில் நடந்து வரும் இந்தச் சண்டையில் ஆனையிறவைப் புலிகள் கைப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ச்சியான விமானக்குண்டு வீச்சு

(ஆனையிறவு)

ஆனையிறவு முகாமைச் சூழவுள்ள பகுதியெங்கும் இரண்டு கெலிகொப்டர்களும் மூன்று குண்டு வீச்சு விமானங்களும், ஒரு அவ்ரோ விமானமும், ஒரு சுவ 12 ரக விமானமும் நேற்று முழு நாளும் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தன.

விடுதலைப் புலிகளின் கடும் (4ஆம் பக்கம் பார்க்க)

## துணைப்படை வீரர் மோதலில் வீரமரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பட்டிக் குடியிருப்பு என்னும் இடத்தில் இருந்து உழவு இயந்திரத்தில் துணைப்படையைச் சேர்ந்த ஒருவரும் மற்றும் ஒரு பொதுமகனும் வந்து கொண்டிருந்தபோது இடம் பெற்ற சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் துணைப் படையைச் சேர்ந்த கிசப்பு (4ஆம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரத்தில் தாக்குதல்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் நான்கு மணியளவில் உலங்கு வானூர்தியொன்று தாக்குதல் நடத்தியது, எனினும் சேத விபரம் தெரியவில்லை. இதேவேளை அன்று இரவு பதினொருமணியளவில் மாவிட்டபுரம் "குடியிருந்து மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் கலிபர் தாக்குதலையும் நடத்தியுள்ளனர். (52)

## பலத்த எதிர்ப்பு பல புலிகள் வீரமரணம்

(ஆனையிறவு)

ஆனையிறவு பெரிய உப்பள இராணுவ முகாம் பகுதியில் தாக்குதல் மேற்கொண்ட விடுதலைப் புலிகள் கடும் எதிர்ப்பைச் சந்தித்ததாக அங்கிருந்து வந்த எமது யுத்தமுனைச் செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

பரவலாகக் காணப்பட்ட கட்டடங்களில் இருந்து பல (4ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதலுக்கு ஒருவர் பலி; பலர் காயம்

(பொன்னாலை)

பொன்னாலை, மூளாய் ஆகிய பொது மக்களின் குடியிருப்புக்கள் மீது காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணமடைந்தோருக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

(ஈச்சமோட்டை)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த போராளிகளுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் அஞ்சலி நிகழ்ச்சிகள் பலஇடங் (4ஆம் பக்கம் பார்க்க)

# 51 ஆம் நாள் நினைவஞ்சலி



## கப்டன் குட்டி ரமேஸ்

(த. இரஞ்சன் - அச்சுவேலி)

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 10-03-1971 | 26-05-1991 |

கட்டுவனில் களம் கண்டாய்
தமிழீழம் உயிர் மூச்சென்றாய்
விண்ணதிரப் போர் புரிந்து - ஈற்றில்
தமிழ் மண்ணில் மலரானாய்

(R/1533) சகபோராளிகள்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 19-07-1947
இறப்பு: 15-06-1991

திருமதி
முத்துக்குமார்
**அமிர்தமலர்**

குடும்பத்தின் ஒளிவிளக்காகிய நீங்கள் அணைந்தாலும்
உங்கள் நினைவுகள் நெஞ்சை விட்டு அணையாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

வெட்டுக்காடு,
கௌதாரிமுனை
பூநகரி

கணவன், பிள்ளைகள், தாய்
சகோதரர்கள்
உறவினர்கள், நண்பர்கள்.

(R/1534)

# நினைவு கூருகின்றோம்...

1991-07-15



ஆனந்த்



லெப். சிலன்



திருமுருகன்



இரகர் - சிவா



மேஜர் ஞானவேல்



லெப். அம்பி

1983 ஆம் ஆண்டு இதே தினத்தில் மீசாலையில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

லெப்.சிலன் (ஞானாஸ் சாள்ஸ் அன்ரனி - திருக்கோணமலை)

ஆனந்த் (ராமநாதன் அருள்நாதன் - மயிலிட்டி)

1987 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

★ வேலுப்பிள்ளை சித்திரவேல் (மட்டக்களப்பு)

இதே ஆண்டு வீரமரணமெய்திய

ஹனீபா (அபுசாலி புஹாரி - அக்கரைப்பற்று)

1988 ஆம் ஆண்டு குச்சவெளியில் ஏற்பட்ட எதிர்பாராத வெடிவிபத்தினால் எமைப்பிரிந்த

2ஆம்லெப். ஞானி (ஈஸ்முத்து சிவராசா - இரியாய்)

பரந்தன் சந்தையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட மாணவி உட்பட 5 தமிழர்கள்

மன்னார், தள்ளாடி சிறிலங்காப்படை முகாமிற்குள் கத்தியால் குத்திக் கொல்லப்பட்ட பரப்புக் கடந்தானைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

1989 ஆம் ஆண்டு கற்சிலைமடுவில் இந்தியப்படையினரின் வாகன அணித்தொடர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரமரணமெய்திய

மேஜர் ஞானவேல் (சிற்றம்பலம் தவானந்தராசா - வரணி)

செம்மலையில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமெய்திய

அசோக் (கந்தையா அசோககுமார் - செம்மலை)

கல்வியங்காட்டில் இந்தியப் படையினருடனான மோதலில் காயமுற்ற நிலையில் கைக்குண்டால் தன்னைத் தானே அழித்துக் கொண்ட

இரகர் சிவா/சின்ன நவீர் (கார்த்திகேசு சிவராசா-54 அம்மாள் வீதி, நாயன்மார்கட்டு)

திருநெல்வேலியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட

★ முருகன் (சோமசுந்தரம் திருமுருகன்-புன்னாலைக் கட்டுவன்)

1990 ஆம் ஆண்டு மாங்குளத்தில் நிகழ்ந்த தவறுதலான வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

சலீம் (சிவனுப்பிள்ளை யோகநாதன் - கிசுவமடு)

யாழ். பழைய பூங்காவில் சிறிலங்காப்படையினரின் விமானக் குண்டு வீச்சினால் வீரமரணமெய்திய

லெப்.அம்பி (சித்தர் கனகரத்தினம் - அச்சுவேலி தெற்கு)

திருக்கோணமலை, கோபாலபுரத்தில், அகதி முகாமில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட

ஒரு பெண் உட்பட 7 தமிழர்கள்
சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட, எரிக்கப்பட்ட 3 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B-2806)

### சிந்தனைக்கு

உயர்ந்த இலட்சியத்திற்காக உயிர் துறப்போர் ஒரு நாளும் தோற்பதில்லை.

— பைரன் பிரபு


ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 15.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# புலிகள் தியாகத்தால் தலைகள் நிமிர்கின்றன

ஆனையிறவில் பெரும் போர் நடைபெறுகின்றது. சிறிலங்கா முப்படைகளுக்கும் எதிராக விடுதலைப் புலிகள் உக்கிரத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். ஆனையிறவு முகாம் சூழவுள்ள பகுதியில் நடைபெறும் இந்தப் பெரும் போர் பல மைல் சுற்றளவிற்கு விஸ்தரிக்கப்படலாம் எனவும் பெரும் யுத்தமாக வெடிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகில் கண்ணிவெடித் தாக்குதலில் பெயர் பெற்றவர்கள், உலகின் சிறந்த கெரில்லாப் படையணியுடையவர்கள், தற்கொலைத் தாக்குதல்களுக்குப் பெயர் போனவர்கள் எதற்கும் அஞ்சா மனோதிடம் மிக்கவர்கள் என எதிரிகளாலும் வர்ணிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் இன்று நிரைப்போரிலும், மரபு வழிப் போராட்டத்திலும் தமது திறமையை வெளிக்காட்டி எதிரிக்குப் பெரும் அழிவுகளையும், நெருக்கடிகளையும் தோற்றுவித்துள்ளனர். ஓர் அரசாங்கத்தின் படைகளைத் தமது திறமையால் திணறடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், இந்த வெற்றிக்கும் பெருமைக்கும் அவர்கள் பணயம் வைப்பது தமது இன் உயிரை தமது மரணத்தை உறுதிப்படுத்திக் கொண்டே அவர்கள் களத்தில் இறங்குகின்றார்கள். தனது சக போராளிகளின் உடலைக் கடந்து சென்றே அவர்கள் போராடுகின்றார்கள். அவர்களின் தியாகத்தின் விளைவாக உலக அரங்கில் தமிழர்களின் தலைகள் நிமிரும் போது அதை ஈட்டித் தந்தவர்களுக்காக அவர்கள் நெஞ்சங்கள் விம்ம வேண்டும். அதுவே தமிழர்களின் நன்றிக் கடன்.

பெருமளவு போராளிகளின் வீரமரணத்தால் இந்த வெற்றிகளைப் பெற்றுள்ள நாம் அந்தப் போராளிகளை எமக்கு ஈன்றுதந்த பெற்றோர்களையும் அவர்களின் உடன்பிறப்புக்களையும் கௌரவிக்க வேண்டும். வீரப் புதல்வர்களின் தியாகங்களுக்காக அவரது குடும்பத்தினர் போற்றப்பட வேண்டும்.

மேலும் இந்தப் போரில் ஒரு பெரும் எண்ணிக்கையான போராளிகள் களத்தில் இருந்து காயமடைந்து வந்து கொண்டிருக்கின்றார்கள் அவர்களின் துன்பங்களை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும் அவர்களுக்கு எம்மாலான சகல உதவிகளையும் நாம் வழங்க முன்வரவேண்டும். அவர்கள் எமது அன்பிற்குரியவர்களாக பராமரிப்பிற்குப் பாத்திரமானவர்களாக இருத்தல் வேண்டும்.

தானும், தனது நண்பனும், சகபோராளியும் சிந்திய இரத்தத்தை தமது மக்கள் கௌரவிக்கின்றார்கள். தமிழ் மக்களின் மனதில் தமது எண்ணங்கள் நிறைந்திருக்கின்றன என்ற உணர்வு அந்தப் போராளிக்கு ஏற்பட வேண்டும். அதையிட்டு போராளி பெருமைப்பட வேண்டும்.

மேலும், போராளிகளுக்கு வழங்கப்படும் கௌரவம் தொடர்ந்தும் களத்தில் நிற்கும் போராளிகளுக்கும், களம் புகத் தயாராகும் போராளிக்கும் புத்துணர்வையும், புது வேகத்தையும் ஊட்ட வேண்டும். தமது மக்களுக்காக எதையும் தியாகம் செய்யலாம். அவர்களின் மனதில் நிலைப்பதைத் தவிர வேறு எதுவும் தனது வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியம் இல்லை என்ற நிலையை மக்கள் உருவாக்க வேண்டும்.

இவை யாவற்றையும் ஒரு பாதுகாப்பான சூழ்நிலையில் இருந்து கொண்டே நாம் வழங்குகிறோம். இப்பாதுகாப்பை அப்போராளிகள் தமது இரத்தத்தைச் சிந்தியே நமக்குப் பெற்றுத் தந்துள்ளார்கள் என்ற உணர்வு எமக்கு ஏற்படுமாயின் மேற்கூறியவை எமது உணர்வில் தானாகவே ஏற்படும். எமது மண்ணும் மிக விரைவில் விடுதலை பெறும். எமது போராளிகளின் சாதனைகளும் நீண்டு கொண்டே போகும்.

# ச.ச. நிலையங்களுக்கிடையில் கலாசாரப் போட்டிகள்

(கொழும்புத்துறை)

யாழ் மாநகரசபைசனசமூக நிலையங்களின் சமாசத்தினால் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையில் கலை, கலாசார, ஒவியப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம், பொது அறிவு ஆகியன நடைபெறவுள்ளன.

கலை, கலாசாரப் போட்டிகள் சம்பந்தமானசுற்றுநிருபம் சகல சனசமூக நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனக் கலை, கலாசாரக் குழுத்தலைவர் திரு. சி. சி. வரதராசா தெரிவித்துள்ளார்.

சிறுகதை, கவிதை, ஓவியங்கள் ஆகியன நேரிலோ, கடிதமூலமோ (27-7-91) சனிக்கிழமைக்கு இடையில் தமக்குக்கிடைக்கக் கூடியதாகஅனுப்பி வைக்கும்படி குழுத்தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(24)

## விடுதலைப் புலிகள்

# கலை, பண்பாட்டுக் கழகத்தின்

# முத்தமிழ் விழா மலர் - 1991

### — ஒரு நோக்கு

இம்மலரில் மூன்று சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இளையவன் எழுதிய 'கையில் கிடைத்த கடிதம்', வசந்தன் எழுதிய 'வானம் வெளிக்கும்' ஆகிய இரண்டும் விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டுவிட்ட இளம் போராளிகளின் உணர்வு நிலைகளை உணர்த்துபவை. இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய 'புரிதல்' என்ற கதை போராட்டத்தின் நியாயத்தைப் புரிந்து கொள்ளாத பொதுமக்களின் மனோபாவம் தொடர்பான விமர்சனம் ஆகும். போராளிகளாக மாறும் இளைஞர்கள் ஏதோ மேலெழுந்தவாரியான கவர்ச்சி காரணமாக அவ்வாறு மாறுகிறார்கள் என்ற வகையில் நிலவும் பொதுவான அபிப்பிராயத்தை மறுதலிக்கும் தொனிப்பொருள் கொண்டனவாக இளையவன், வசந்தன் இருவரது கதைகளும் உள்ளன. போராளிகளாக மாறுபவர்கள் உண்மையில் உணர்வுபூர்வமாகவே - போராட்டத்தின் நியாயத்தையும், அவசியத்தையும் உளப்பூர்வமாக ஏற்றுக்கொண்ட நிலையிலேயே-அதில் தம்மை இணைத்துக்கொள்கிறார்கள் என்பதை இருவரின் கதைகளும் வெவ்வேறு அநுபவத்தளங்களினூடாக வெளிப்படுத்துகின்றன. வசந்தன் தனது கதை சிங்கள இராணுவத்தால் சூறையாடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுவிட்ட ஒரு தமிழ்க்கிராமத்தில்- தென்மராட்சிக் கிராமத்தில்- இருந்து தப்பி வேண்டிய குடும்பமொன்றில் உருவான போராளியின் கதை. இளையவனது கதை யாழ்ப்பாணப்பிரதேசமென்று பொதுவான கருத்துக்க சூழலின் நடுத்தரவர்க்க குடும்பமொன்றில் உருவான போராளியின் கதை.

சிங்களவரின் இனவெறி ஆக்கிரமிப்பால் இழக்கப்பட்டுவிட்ட மண்ணை மீட்கும் போரில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டுவிட்ட தம்பி என்ற இளம்புலியின் உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் எரிமலையை வசந்தன் கலைத்துவம் சிதறாமல் தீட்டியுள்ளார்.

"டேய் நீ படிக்கக் கள்ளத்தில் தான் இயக்கத்துக்கு வந்தனி' (இது சகபோராளியின்கேள்வி) தம்பியின் முகம் கோபத்தால் சிவந்தது.

"வேணுமெண்டால் பள்ளிக்கூடத்தில போய்க் கேளுங்கோ நான் எத்தினையாம் பிள்ளை என்று நான் ஆரெண்டு தெரியேலை" (இதுதம்பியின்பதில்) இவ்வாறுகூறித் தன்னைக்கடும் பயிற்சிக்கு உட்படுத்திக் கொண்டு சின்னமகேந்தி என அழைக்கப்படத் தொடங்கிய தம்பி,

"எனக்கு ஒரேஒரு விருப்பந்தான் ஊருக்கு நாங்கள் எல்லாம் போகவேணும்....? நானும் அம்மாவும் எங்கடை ஊராக்களும் இரவிரவா சாப்பாடு இல்லாமல் சேத்திலையும் தண்ணியிலையும் விழுந்து விழுந்து ஓடிவந்ததை நான் மறக்கேலை மறக்கப் போறதும் இல்லை"

எனத்தனது உணர்வோட்டங்களை வெளிப்படுத்துகின்றான்.

"இதனைக் கேட்டுத் தங்கள் என்ற போராளி அந்தச் சின்ன எரிமலையை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்" என்ற வாக்கியத்துடன் கதை நிறைவடைகிறது. இந்த கதைக்கு 'எரிமலை' எனப் பெயரிட்டிருந்தால் இன்னும் பொருத்தமாக அமைந்திருக்கும்.

இளையவனது கதை யாழ்ப்பாணப் பிரதேச நடுத்தரவர்க்கப் பொது மனிதனின் மனப்பான்மையைப் பகைப்புலமாகக் கொண்டு தீட்டப்பட்டது. போராட்டத்தை வரவேற்பது; போராளிகளை ஆதரிப்பது; ஆனால் தங்கள் பிள்ளைகளை மட்டும் போராட்ட இயக்கத்திற்சேர விடாமல் பாதுகாப்பாக வைத்திருக்க முயல்வது; அப்படிச் சேருவதானாலும் கூட நல்ல பதவி நிலையில் இடம்பெறவேண்டும் என நினைப்பது; இதுதான் மேற்படி பொதுமனித மனப்பான்மையின் வெட்டுமுகம். இத்தகு மனப்பான்மையுடைய தந்தையொருவருக்கு இயக்கத்தைச் சேர்ந்த மகன் எழுதும் கடிதமாக இக்கதை அமைந்துள்ளது மேற்படி மனப்பான்மை அப்போராளி மகனால் விமர்சனமாக அமைந்தது இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் 'புரிதல்' கதை.

"சும்மா இருக்கேலாமல் அவங்களோடை சுரண்டுகிறது. இப்பபாருங்கோ நாங்கள் படுகிறபாட்டை" இது இடம்பெயர்ந்தோரும் நிலையில் மனைவியின் பிரலாபம் போராட்ட கால அவலங்களுக்குப் போராளிகளின் செயல்களே காரணம் என்ற வகையில் நிலவும் பொதுசன மனப்பான்மை ஒன்றின் வெட்டுமுகம் இது. அப்போராளிகளின் செயல்கட்குப் பின்னால் உள்ள நியாயத்தைச் சமூகம் சரிவரப்புரிந்து கொள்ளவேண்டும் என்பது இக்கதையின் தொனிப்பொருள் ஆகும்.

வீடிழந்து அகதிகளாய் வாழும் நிலையில் கூடக் குடும்ப உறவினரை உங்கடை ஆக்கள், எங்கடை ஆக்கள்

கலாநிதி நா. சுப்பிரமணியன்
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

சிக்கப்படுகிறது; தன்னிலை விளக்கமும் தரப்படுகிறது: போராளிகள் பயிற்றப்படும் முகாம்களில் நிலவும் சகோதரபாசம் மிக்க உறவு நிலை எடுத்துக் காட்டப்படுகிறது. இவ்வாக்கியத்தை ஒரு கதை என்பதை விடப்போராளிகளாக மாறும் பலரின் எண்ண ஓட்டங்களை இனங்காட்டி நிற்கும் ஒரு ஆவணம் என்றே கருதலாம். இதில் அமைந்துள்ள கடிதப்பகுதிக்கு முன் பின்னாக அமையும் பந்திகளை அகற்றிவிட்டாலும் இதன் முழுமை பாதிக்கப்படாது.

போராட்ட சூழலில் 'ஷெல்' தாக்குதல்களால் வீட்டை விட்டோடி உறவினர் வீட்டில் வாழும் ஒரு குடும்பத்தின் உணர்வு நிலைகளினூடாக மேற்கொள்ளப்பட்ட சமூக எனப் பிரித்துப் பேசும் மனோபாவங்கள், சொந்தமான வீட்டுக்கு (உரிமையுடைய நாட்டுக்கு) மீள வேண்டும் என்ற உணர்வுடன் செயற்படாமல் உறவினர் உபசரிப்பில் அமைதி காணும் நிலைப்பாடு என்பன மேற்படி கதைத் தொனிப் பொருளை அழுத்தமாக வெளிப்படுத்த ஏற்ற களைப் புலங்களாக அமைந்துள்ளன. சமகால போராட்ட சூழலின் கண்ணாடியாகக் கருத்துக்க தரமான சிறுகதை இது.

மேற்படி மூன்று சிறுகதைகளும் போராட்டகால இலக்கியங்கள் என்ற வகையில் தனிக்கவனம் பெறத்தக்க ஆக்கங்களாகும். (தொடரும்)

# திலீபனின் நினைவாக தடகள போட்டிகள்

திலீபன் நினைவாக நடத்தப்படும் தடகள விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 20-ம், 21-ம் திகதிகளில் சண்டிலிப்பாய், கோப்பாய் நல்லூர் ஆகிய வட்டங்களிலும், பளை, உடுவில், சாவகச்சேரி, கரவெட்டி ஆகிய வட்டங்களில் 25-ம், 26-ம் திகதிகளிலும், மருத்தித்துறை, யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, மருதங்கேணி, சங்கானை ஆகிய வட்டங்களில் 27-ம், 28-ம் திகதிகளிலும் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் வட்டப் போட்டிகள் - பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலும், கோப்பாய் வட்டப் போட்டிகள் - அத்தியார் இந்துமைதானத்திலும், நல்லூர் வட்டப் போட்டிகள் - கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும், பளைவட்டப் போட்டிகள் - இத்தாவில் விளையாட்டு மைதானத்திலும், உடுவில் வட்டப் போட்டிகள் - கந்தவரோதையா கல்லூரி மைதானத்திலும், சாவகச்சேரி வட்டப் போட்டிகள் - மட்டுவில்மகா வித்தியாலயத்திலும், கரவெட்டி வட்டப் போட்டிகள் - நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்திலும், பருத்தித்துறை வட்டப் போட்டிகள் - ஹாட்லிக் கல்லூரியிலும், யாழ் வட்டப் போட்டிகள் - புனித சம்பத்திரிசியார் கல்லூரியிலும், தெல்லிப்பளை வட்டப் போட்டிகள்- மகாஜனக்கல்லூரியிலும், மருதங்கேணி வட்டப் போட்டிகள்-செம்பியன்பற்று அரசினர் த.க பாடசாலையிலும், சங்கானை வட்டப் போட்டிகள் - அரசடி மாவத்தை விளையாட்டு மைதானத்திலும் நடாத்தப்படும்.

விண்ணப்பித்த போட்டியாளர்கள் நியமிக்கப்பட்ட விளையாட்டுப் பொறுப்பாளர்களுடன் ஒத்துழைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

## மஹோற்சவம்

(அராலி)

அராலி, வரைப்பிட்டி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் புதன்கிழமையன்று (17-07-91) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்து நாட்கள் இடம்பெறும் இம் மஹோற்சவம் (26-7-91) அன்று தீர்த்த உற்சவத்துடன் நிறைவெய்தும்.

# இம்மோதல்வித்தியாசமானது; விமானப்படை செயலிழந்தது.

## களத்திலுள்ள போராளியின் விசேட பேட்டி

(ஆனையிறவு)

இதுவரை நடந்த தாக்குதல்களில் இருந்து இந்த ஆனையிறவு முகாம் தாக்குதல் வித்தியாசமானது இந்தத் தாக்குதலில் விமானப்படை முற்றாகச் செயலிழந்துள்ளது. இவ்வாறு கூறினார் ஆனையிறவுப் பகுதியில் யுத்த நடவடிக்கைகளில் பங்கேற்று வரும் பீற்றர் என்ற போராளி.

நேற்றுமாலை 5-45மணியளவில் ஆனையிறவு யுத்தக்களத்தில் கணேஷ் என்ற போராளி வீரமரணமடைந்தார். அவரது புகழுடலை ஒருவாகனத்தில் ஏற்றி அனுப்பிவிட்டு வந்த போராளி ஒருவர் எமது விசேஷ நிருபரின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

''இம்மாதிரியான சூழ்நிலையில் உங்களுடன் இருக்கும் ஒரு போராளி வீரமரணமடையும் போது உங்கள் மன உணர்வுகள் எவ்வாறு இருந்தது?'' என்று அவரிடம் கேட்டபோது அதற்கு அவர் பதிலளிக்கையில் ''இந்த யுத்தக் களத்தில் புகுந்த ஒவ்வொரு போராளியும் நாம் எமது லட்சியத்தில் வெல்லுவோம் என்ற நம்பிக்கையுடனும், தான் மரணிக்கும்போது தனது ஆயுதத்தை இன்னொருவர் ஏந்தி தனது கனவை நனவாக்குவார் என்ற நம்பிக்கையுடனே வீரமரணமடைகின்றான்.

இவர்களது மரணம் எமது இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் வேகத்தை இன்னும் அதிகரிக்கின்றதேயொழிய எம்மை அச்சமடைய வைக்கவில்லை என்றார்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர் பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள் என்று கேட்டபோது அரசு தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து எமது முற்றுகையை முறியடிக்க நினைக்கின்றது. இதுவரை நடந்த தாக்குதல்களிலிருந்து இந்த ஆனையிறவு முகாம் தாக்குதல் வித்தியாசமானது இத்தாக்குதலில் விமானப்படை முற்றாகச் செயலிழந்துள்ளது. இந்த இராணுவமுகாம் எமது கையில் வீழ்ச்சியுறும் நாள் வெகு தொலைவில் இல்லை என்றார்.

பொதுமக்களிடம் இருந்து நீங்கள் என்ன எதிர்பார்க்கின்றீர்கள் என்று கேட்டபோது இங்கு போராளிகள் கண்விழித்து யுத்தநடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதுடன் அவர்களே பதுங்குகுழி வெட்டல் மற்றும் இதுபோன்றகடினமான வேலைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது இதனால் போராளிகள் விரைவில் களைப்படைந்துவிடுகின்றார்கள். எமது போராட்டத்தில் துணைப்படை ஒன்று இருந்திருக்குமாயின் இன்று உங்கள் கண்ணெதிரே நிகழ்ந்த கணேஷின் மரணம் போன்றவற்றை தவிர்க்கக்கூடியதாக இருக்கும் எனவே பொதுமக்கள் துணைப்படையில் பெருமளவு இணைய வேண்டும் அதன்மூலம் போராட்டத்தை இன்னும் விரைவுபடுத்தமுடியும் எமது தலைவரின் வழிகாட்டலின்கீழ் எமது இலட்சியத்தை வென்றெடுக்க முடியும் என்றார் அவர்.

கட்டைக் காட்டில்

வவில்] தரையிறங்கியதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் மூண்டது. தரையிறங்கிய இரா

# வவுனி. அமைதிநிலவுவதாக அதிகாரிகள் தகவல்

(வவுனியா)

ஆனையிறவில் சண்டை நடக்கின்ற போதிலும் வவுனியா மாவட்டத்தில் சம்பவம் எதுவும் இடம் பெறவில்லை எனவும் இம் மாவட்டத்தில் அமைதி நிலவுகிறது எனவும் சிறிலங்கா ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் முன்னர் அறிவித்தபடி அகதிமுகாம் இடம் மாற்றப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இனபேதமின்றிப் பொலிஸில் பதியகோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தையில் நிரந்தரமாக வசிக்கும் சிங்கள, முஸ்லிம், தமிழர்கள் அனைவரையும் பதிவு செய்ய மாளிகாவத்தைப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது

நேற்று முன்தினம் மாளிகாவத்தை பொலிஸார் வீடு வீடாகச் சென்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள ஆட்பதிவுப் பத்திரங்களை விநியோகித்து அனைவரையும் பதிவு செய்து கொள்ளுமாறுகேட்டுக்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்கஆக்கிரமிப்பைத் தடுக்க கோரிக்கை

# சிங்கள ஊர்காவற்படை ஒருவர் பலி; ஆயுதம் மீட்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாமடு என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் சிங்கள ஊர்காவல் படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டனர் இத்தாக்குதலில் ஊர்காவல் படையைச் சேர்ந்தவர் ஒருவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். ஏனையோர் அங்கிருந்து ஓடிவிட்டனர்,

நேற்று முன்தினம் மாலை ஏழு மணியளவில் இடம்பெற்ற இம்மோதலில்

★ 303 ரக துப்பாக்கி 01
★ ரவைகள் 12
★ தோட்டாக்கள் 02

என்பனவும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

ஆனையிறவு

பற்றினால், அது இனப்போரில் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும் என்று இந்திய வானொலியின் கொழும்புச் செய்தியாளர் சுப்புச்சாமியின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

கட்டைக் காட்டிலிருந்து

மோதல் நடந்த வண்ணம் இருப்பதைக் காண முடிந்தது.

சைக்கிள்களிலும், கால்நடையாகவும், சாரிசாரியாக இடம்பெயர்ந்து வரும் மக்கள் பளைப்பகுதியை நோக்கி வருகின்றனர். கைக்குழந்தைகளோடு பெண்களும், முதியோருமாக பொதுமக்கள் கைக்குக் கிடைத்த பொருள்களுடன் அவசரம் அவசரமாக இடம் பெயர்ந்து வந்த வண்ணமுள்ளனர்.

தொடர்ச்சியான

விமான எதிர்ப்புத் தாக்குதலினால், விமானப்படை விமானங்கள் பல ஆயிரம் அடிக்கு மேற்பட்ட உயரத்தில் இருந்து குண்டுகளை வீசுவதனால் அவை இலக்குகள் இன்றி வீழ்ந்து வெடிப்பதாகத் தெரிய வருகின்றது. மேலும் மணற்பரப்பில் இத்தாக்குதல்கள் நடைபெறுவதால் பல குண்டுகள் வெடிக்காத நிலையில் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

பலத்த எதிர்ப்பு

மான எதிர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், விமானப்படையும் புலிகள் நிலைமீது பலத்த குண்டு வீச்சை நிகழ்த்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் குறுகியதூர இடைவெளியில் மோதல்கள் இடம்

# லெப். சீலனின் நினைவுக் கூட்டம்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான லெப். சீலன் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை மூன்று மணியளவில் அரியாலையிலுள்ள மேஜர் செங்கதிர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் திருமலை மக்கள் தொடர்பகத்தால் பராமரிக்கப்படும் லெப் செல்லக்கிளி அம்மான் தற்காலிக வீடமைப்புத்திட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் செய்துள்ளனர்.

வீரமரணமடைந்]

களில் நடைபெற்றன:

வீரமரணமடைந்தபோராளிகளின்புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. கறுப்புக்கொடிகள்,வாழைமரங்கள், தோரணங்கள் என்பன கட்டப்பட்டு வீரவேங்கைகளுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதனிடையில் பூநகரியில் வீர வேங்கைகளுக்குச் சென்ற புதன்கிழமையிலிருந்து துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. வர்த்தக நிலையங்கள், அரசாங்க ஸ்தாபனங்கள் பூட்டப்பட்டு வீதிகள் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுத் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. இது இவ்வாறிருக்க வாகனங்கள் தடையின்றிச் செல்வதற்குப் பூநகரியின் பிரதான சந்

# அமெரிக்கஆக்கிரமிப்பைத் தடுக்க கோரிக்கை

அமெரிக்காவின் புதிய இராணுவ ஆக்கிரமிப்பை தடுக்க உதவுமாறு அரபு நாடுகள் முழுவையும் ஐ. நா. சபையையும் ஈராக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

அரபு லீக்கிற்கும், ஐ. நா. சபையின் தலைமைச் செயலாளர் பெரஸ்டி கொயிலருக்கும் ஈராக் எழுதியுள்ள கடிதத்தில் வளைகுடாப் போர் நிறுத்த தீர்மானங்களின்படிதான் நடந்துகொண்டதாகவும் தனது அணுசக்தி அமைப்புக்களை ஐ. நா. குழு மேற்பார்வையிட எல்லா உதவிகளும் வழங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளது.

ஐ. நா. சபையின் தீர்மானங்களை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு புதிய இராணுவ தாக்குதலில் அமெரிக்கா ஈடுபட முனைகிறது என்று ஈராக் குற்றஞ்சாட்டியது.

## சாவகச்சேரியில் இருவர் காயம்

சாவகச்சேரிப் பகுதியை நோக்கி திடீர் செல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பலாலி விமானப்படைத் தளத்திலிருந்து இந்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல்களில் படுகாயமுற்ற வ. ஊர்தநாயகம், கே. கணேஸ்வமி ஆகியோர் யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்டனர். நேற்று இரவு 8.30 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

# இ. த. ஆசிரியர் சங்கம் மாவீரர்களுக்கு அஞ்சலி

தமிழீழ மண் மீட்புப்போரில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆனையிறவு முகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வீரவணக்கத்தையும், கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றது.

இப்போரினால் ஏற்பட்டிருக்கும் அவசரமானதும், முக்கியமானதுமான கீழ்வருவனவற்றைச்செய்வது நம் கடமையாகும்.

(அ) இரத்ததானம்

(ஆ) காயப்பட்ட போராளிகளைப்பராமரித்தல்

(இ) உலர் உணவு ஏனைய பொருள்களைச்சேகரித்தல்

இப்பணிகளை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் ஒன்றிணைந்து செய்யுமாறும், இரத்ததானம் செய்ய விரும்புவோரும், காயப்பட்ட போராளிகளைப்பராமரிக்கவிரும்புவோரும் ஆஸ்பத்திரி வீதியில் இருக்கும் பாலம் அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறும், சேகரித்த பொருள்களை இக்காரியாலயத்தில் ஒப்படைக்குமாறும் வெகு விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

த. மகாசிவம்
பொதுச்செயலாளர்
442 பருத்தித்துறை வீதி
நல்லூர்

B/2815

இப்பத்திரிகை வலம்புரி அச்சகம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வல்லை தரையிறங்கியதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் மூண்டது. தரையிறங்கிய இராணுவத்தினரைச் சுற்றி வளைத்த விடுதலைப் புலிகள் இராணுவத்தினரின் முகாம் நோக்கிய நகர்வைத் தடுத்து நிறுத்தி தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை தரையிறங்கிய இராணுவத்தினருக்கு உதவியாக விமானப்படை விமானங்களும் கடும் தாக்குதலை மேற்கொண்ட வண்ணமுள்ளன எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வீரவணக்கம்

ஆனையிறவு மோதலில் நேற்று மாலை 5.45 மணியளவில் விடுதலைப் புலிகள் தரப்பில் கணேஷ் வீரமரணமடைந்தார்

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### எறிகணை

பலர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 12-30 மணி முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின்போது காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்து வந்திருந்த திருமதி பாக்கியம் (வயது 58) என்பவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். மேலும் சிவஞானம் (வயது 39) பத்மாவதி, அருணகிரிநாதன் (வயது 18) கியோர் உட்பட மேலும் சிலர் காயமடைந்தனர் (85.ஈ)

### துணைப்படை

சிவராசா (வயது 32 - பட்டிக் குடியிருப்பு) என்பவர் வீரமரணம் அடைந்தார். இவருடன் வந்த பொதுமகன் தம்பிராசா ஈஸ்வரன் (மாமடு) என்பவரும் உயிரிழந்தார்.

இம்மோதல் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டுமணி அளவில் நடைபெற்றது.

நிலைமீது பலத்த குண்டு வீச்சை நிகழ்த்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் குறுகியதூர இடைவெளியில் மோதல்கள் இடம் பெற்றதனால் துப்பாக்கிச்சண்டையும் உக்கிரமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது கைகலப்பு என்று குறிப்பிடும் அளவில் இருபகுதியினரும் மோதிக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

இதன் காரணமாக விடுதலைப்புலிகள் தரப்பிலும் பலர் வீரமரணமடைந்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

### பெரிய உப்பள

மான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மோதலில் களத்தில் நின்ற தளபதி ஒருவர் இது போன்றதொரு குறுகிய தூரத் துப்பாக்கிச் சண்டை இதுவரை நடைபெறவில்லை என்றார்.

### 35 ஏக்கரில் 30 கட்டடங்கள்

பெரிய உப்பள இராணுவ முகாம் என்றழைக்கப்படும் இந்த இராணுவமுகாம் பகுதி முப்பத்தைந்து ஏக்கர் பரப்பளவில் முப்பதுமாடியகட்டடங்களில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இந்தக் கட்டடங்கள் பலவற்றின்மீதே நேற்று முன்தினமிரவு புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்

சிறுரகபீரங்கிகளும், மோட்டார்களும் கொண்டு இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. பல கட்டடங்கள் சேதமடைந்தன. சில கட்டடங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

### நூறு இராணுவத்தினர் பலி

இந்தத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இறந்த இராணுவத்தினரின் உடல்களைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர். மேலும் பல உடல்கள் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டுள்ளன.

களால் கலந்தாலோசிக்கப்பட்டுத் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. இது இவ்வாறிருக்க வாகனங்கள் தடையின்றிச் செல்வதற்குப் பூநகரியின் பிரதான சங்குப்பிட்டி வீதியை நூற்றுக்கணக்கான மக்கள் அணி திரண்டு சிரமதானம் செய்துதிருத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (43

### கட்டுப்பாடுகள்

இந்தியஅரசாங்கத்திற்குவிடுத்துள்ளார். இவர் விடுத்துள்ள அறிக்கையில் "இந்திய தூதரக வாசலில் விசாவிற்காகக் காத்திருக்கும் நீண்ட வரிசை படிப்படியாக நீக்கப்பட்டுவிடும் என்று நான் நம்பியிருந்தேன் ஆனால் இது நடைபெறவில்லை இந்தியாவிற்குச் செல்ல விரும்பும் மக்கள் இவ்வாறான சிரமத்திற்கும், மெய் வருத்தத்திற்கும் உள்ளாக்கப்படுவது வேதனையாகும். ஆசியாவாழ் மக்களை ஆசியவாழ் மக்கள் மதித்து நடத்த வேண்டும் விசாவிற்கான நீண்ட வரிசைகளை நீக்கக் கூடிய திட்டத்தை வகுக்க வேண்டும் என்று நான் இந்திய அரசை கேட்டுக் கொள்கின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

### ஜி. பி. எம்.

★ ரி-81 ரகத்துப்பாக்கிகள் - 02

★ ஜீ 3 ரகத்துப்பாக்கி - 01

★ ரி-56 ரகத்துப்பாக்கி ரவைக்கூடுகள் - 04

★ ஜி 3 ரகத் துப்பாக்கி ரவைக்கூடுகள் - 05

★ ஏ கே. இலகு இயந்திரத் துப்பாக்கி ரவைக்கூடுகள் - 02

★ ஏ கே. இலகு இயந்திரத் துப்பாக்கிக்கு உரிய விங்குகள் - 290

★ பொதுப் பயன்பாட்டு ரகத் துப்பாக்கி ரவைகள் - 610

★ நடுத்தர ரவைகள் - 2120

★ நேட்டோ ரவைகள் - 80

★ தலைக்கவசம் - 01

★ தொலைத்தொடர்பு சாதனம் - 01

★ பி. கே. மி. - 02